கடலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
முன்னிலை: திரு.இரா.பூபதி, எம்.எஸ்.சி., எம்.எட்.,

ந.க.எண். 14211 /அ3/2021 நாள். .03. 2022

பொருள்: பள்ளிக் கல்வி – கருணை அடிப்படையில் நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி –பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு.M.இராமலிங்கம் என்பவரின் வாரிசுதாரரும், மகனுமான திரு.S.R.செல்வகுமார் என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

ஆ 31/03/22.

பார்வை:
1. கடலூர் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 8303/அ1/1998. நாள் 09.05.2013.
2. அரசாணை (நிலை) எண். 80 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ1)துறை நாள். 02.03.2016.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் ந.க.எண். 10228/ஜே2/2014. நாள் 30.03.2016.
4. சிதம்பரம் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 2348/அ1/2021. நாள் 22.12.2021 .

******

பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி கடலூர் மாவட்டம், கண்டரக்கோட்டை, அரசு உயர்நிலைப்பள்ளியில் தலைமையாசிரியராக பணிபுரிந்து பணிக்காலத்தில் 28.05.1998 அன்று காலமான திரு.M.இராமலிங்கம் என்பவரின் வாரிசுதாரரும், மகனுமான திரு.S.R.செல்வகுமார் என்பவருக்கு பார்வை 1ல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு 13.05.2013 முற்பகல் முதல் கடலூர் மாவட்டம், சிதம்பரம், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பணிபுரிந்து வருகிறார் .

பார்வை 2ல் காணும் அரசாணை பத்தி 6.1 மற்றும் 6.2 ல் 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை விரைந்து பணிவரன்முறை செய்திட ஏதுவாக 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Order) தேவைப்படாத அனைத்து அலுவலர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு அவ்வரசாணையின்மூலம் வரன்முறைப்படுத்தப்படுகிறது எனவும் இவ்வாணையினை செயல்படுத்த சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்கள் (Appointing Authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில், மேற்கண்டுள்ள அரசாணை மற்றும் பார்வை 3 –ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைக்கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு எந்த வித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாததால் பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியரான திரு.M.இராமலிங்கம் என்பவரின் வாரிசுதாரரும், மகனுமான திரு.S.R.செல்வகுமார் என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக நியமனம் பெறுவதற்கு உரிய தகுதிகள் பெற்றுள்ளதால் நியமன நாளான 13.05.2013 முற்பகல் முதல் அன்னாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தப்படுகிறது .

மேற்படி திரு.S.R.செல்வகுமார் பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர் பணியில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார். தகுதிகாண் பருவ காலத்தில் மேற்படி தனியர் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் குறிப்பிட்ட தேர்வுகள் பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டுமென்றும் என ஆணையிடப்படுகிறது.

அன்னார் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பித்த சான்றுகள் அடிப்படையிலும், தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலரின் பரிந்துரையினை ஏற்று இவ்வாணை வழங்கப்படுகிறது.

இவ்விவரங்களில் தவறுகள் ஏதும் கண்டறியப்படின், ஆவணங்கள் உண்மைத் தன்மையற்றது என அறியப்படின் இவ்வாணை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இரத்து செய்யப்படுவதுடன் தொடர்புடைய பணியாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றவியல் நடவடிக்கை தொடரப்படும் எனத் தெரிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
கடலூர்.
25/3/20..

பெறுநர்

1. தனியர் (உரிய வழியாக)
2. தலைமையாசிரியர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, சிதம்பரம்.
3. மாவட்டக்கல்வி அலுவலர், சிதம்பரம்.
4. பள்ளிக் கல்விஇணை இயக்குநர் (பணியாளர் தொகுதி), சென்னை – 6. அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது .